## 17. WATER SUPPLY

**17.4 கிராம ஊராட்சிகளில் கைப்பம்பு/ விசைப்பம்புகளை பராமரித்தல்– ஊராட்சி ஒன்றிய அளவில் 'தொழில்நுட்ப சேவைக்குழு' மற்றும் 'சுழல் நிதி ஏற்படுத்துதல்'**

---

ஊரக வளர்ச்சி (தி3.) துறை

அரசாணை (நிலை) எண். 121 நாள் : 10.05.2000.

படிக்க :

1. அரசாணை நிலை எண். 141, ஊரக வளர்ச்சி நாள்–03.08.1995.
2. அரசாணை நிலை எண். 93, ஊரக வளர்ச்சி நாள்–23.061997.
3. அரசாணை நிலை எண். 84, ஊரக வளர்ச்சி நாள்–05.05.1998.
4. அரசாணை (2டி) எண். 149, ஊரக வளர்ச்சி நாள்–09.07.1999.
5. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.27094/ஈ1/99, நாள்–06.04.2000.

**ஆணை**

படிக்கப்பட்டவை நான்கில் குறிப்பிட்டுள்ள அரசாணையில், கிராம ஊராட்சிகளின் பணியமைப்பை அவைகளின் நிதிநிலைக்கு ஏற்ப சீரமைத்து, செயல்பாட்டை மேம்படுத்துவது குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்க அலுவலர்கள் மற்றும் அலுவலர்களல்லாதவர்களைத் கொண்ட குழு ஒன்று ஏற்படுத்தி ஆணையிடப்பட்டது. ஊராட்சிகள் சட்டம் 1994ன்படி அமலுக்கு வந்துள்ள மூன்றடுக்கு ஊராட்சிகள் நிர்வாக அமைப்பில், கிராம குடிநீர் திட்ட கைப்பம்பு / விசைப்பம்புகளை பராமரிக்கும் பொறுப்பு, கிராம ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அப்பணிகளை கிராம ஊராட்சிகள் உள்ளூரில் உள்ள பயிற்சி பெற்ற தனி நபர்கள் மற்றும் நிறுவனங்கள் மூலமாக செய்வதற்கான நெறிமுறைகள் படிக்கப்பட்டவை மூன்றில் குறிப்பிட்டுள்ள அரசாணையில் வெளியிடப்பட்டன. எனவே ஏற்கனவே பணியாற்றிவரும் கிராம குடிநீர் பராமரிப்பு பணியாளர்களை எவ்வகையில் கிராம ஊராட்சிகளால் கைப்பம்பு / விசைப்பம்பு பராமரிக்கப்படும் பணியில் பயன்படுத்தலாம் என்பது குறித்து ஆய்வு செய்து பரிந்துரைக்குமாறும், மேற்குறிப்பிட்ட குழு கேட்டுக் கொள்ளப்பட்டது.

2.மேற்குறிப்பிட்ட கிராம ஊராட்சிகளின் பணியமைப்பு சீரமைப்புக் குழு தனது அறிக்கையில், கீழ்க்கண்டவாறு பரிந்துரைத்துள்ளது :

பரிந்துரை எண். 4

கைப்பம்பு பொருத்துநர் அவரைச் சார்ந்த உதவியாளர்கள், விசைப்பம்பு பராமரிப்புக்கு உதவி புரிந்த மின்பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள் ஆகிய தொழில் நுட்ப பணியாளர்களை முழுமையாக குடிநீர் பராமரிப்பு பணிக்கென பயன்படுத்திக் கொள்ளும் வகையில், இவர்கள் அனைவர்களையும் உள்ளடக்கிய தொழில் நுட்ப சேவைக்குழு ஊராட்சி ஒன்றிய அளவில் அமைக்கலாம். அவ்வாறு அமைக்கப்படும் தொழில் நுட்ப சேவைக் குழு ஊராட்சிகளிலுள்ள கைப்பம்பு மற்றும் விசைப்பம்பு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும். இப்பணிகளுக்கான சேவைக் கட்டணத்தை பழுதுகளின் தன்மைக்கு ஏற்ப அவற்றை வகைப்படுத்தி சேவைக் கட்டணத்தை நிர்ணயம் செய்யலாம். சேவைக் குழுவினர், ஊராட்சி தலைவரின் கோரிக்கையின் பேரில் பழுது நீக்கம் செய்து முடித்த பின் அதற்குரிய சேவைக் கட்டணத்தை ஊராட்சி செலுத்த வேண்டுமென்றும் ஆணையிடலாமென இக்குழு பரிந்துரை செய்கிறது.

ஆ) கிராம ஊராட்சிகள் மேற்கொள்ளும் கைப்பம்பு மற்றும் விசைப்பம்பு பராமரிப்பு பணிகளுக்கு இனிமேல் மேற்குறிப்பிட்ட தொழில் நுட்ப சேவைக் குழுவை பயன்படுத்த வேண்டும் என்றும், பழுதுகளின் தன்மைக்கு ஏற்ப வகைப்படுத்தி நிர்ணயம் செய்யப்படும் சேவைக் கட்டணத்தை பழுது நீக்கம் செய்து முடித்த பின் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியத்திற்கு செலுத்த வேண்டும் என்று ஆணையிடப்படுகிறது.

இ) பழுதுகளின் தன்மைகள் மற்றும் அதற்கான சேவைக் கட்டணத்தை ஊரக வளர்ச்சி இயக்குநர் நிர்ணயிக்கவும் அரசு ஆணையிடுகின்றது.

ஈ) தொழில் நுட்ப சேவைக் குழு வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) கட்டுபாட்டில் ஒன்றிய பொறியாளரின் தொழில் நுட்ப ஆலோசனையை பெற்று செயல்பட வேண்டும்.

உ)இனிமேல் உபரி மின்விசைப் பம்புகளை பராமரிக்கும் பொறுப்பு தொழில் நுட்ப சேவைக் குழுவிடம் ஒப்படைக்கப்படுகிறது'. கிராம ஊராட்களில் உள்ள மின் விசைப் பம்புகள் பழுதுபடும் பொழுது தொழில் நுட்ப சேவைக் குழுவிடம் உள்ள உபரி மின் விசைப் பம்பினை கிராம ஊராட்சிகள் கோரி பெற்று அவரச தேவைகளை நிறைவு செய்து கொள்ள வேண்டும்.

ஊ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் சுழல் நிதி ஒன்று ஏற்படுத்தவும், அதற்கென நடப்பாண்டு 2000–01க்கான கிராம குடிநீர் பராமரிப்பு மானியம் மற்றும் சமன்பாடு ஊக்க நிதியிலிருது ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் முதற்கட்டமாக மொத்தம் ரூ.1.00 இலட்சம் வழங்கவும் ஆணையிடப்படுகிறது.

எ) கிராம ஊராட்சிகளிடமிருந்து வசூலிக்கப்படும் சேவைக் கட்டணம் மேற்குறிப்பிட்ட சுழல் நிதியில் சேர்க்கப்படவேண்டும்.

ஏ) தொழில்நுட்ப சேவைக் குழுவில் உள்ள கைப்பம்பு பொருத்துநர், பொருத்துநரின் உதவியாளர்கள், மின்பணியாளர் மற்றும் மின்பணியாளரின் உதவியாளர்களுக்கு அவரவர் பெற்று வந்த ஊதிய முறைகளிலேயே இனிமேல் சுழல் நிதியிலிருந்து ஊதியம் வழங்க ஆணையிடப்படுகின்றது.

5. இந்த அரசாணையின் நகலை அனைத்து கிராம ஊராட்சித் தலைவர்கள், உதவி இயக்குநர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு உடனடியாக அனுப்புமாறு மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

6.இந்த அரசாணை நிதித்துறையின் அ.சா. 1370/FS/P/2000, நாள்–03.05.2000 இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்